குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35-2015

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. மணிகன்டன் ( SSI of police Bagalur PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கிருஷ்ணன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 48 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 15.05.2026 (எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாகலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். பாகலூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 259/2014 வழக்கு CC.No. 35/2015 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் மனோகரன் என்பவருடன் நான் பணிப்புரிந்துள்ளதால்

அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு அறிமுகம் ஆகும். எனவே, இவ்வழக்கில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.10.2014ம் தேதி பாகலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பேட்ராயன் நிலையப்பொறுப்பில் இருந்த போது உஷாராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண் 259/2014 இ.த.ச. பிரிவுகள் 379 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட வழக்கில் காவல் ஆய்வாளர் மனோகரன் தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளை தேடி வந்த நிலையில் 07.12.2014ம் தேதி காலை 10.00 மணிக்கு பாகலூர் – மாலூர் மெயின் ரோட்டில் தேவிராப்பள்ளி ரோட்டுக்கு வடக்கே உள்ள தைலமரத்தோப்பில் மறைந்து இருந்த எதிரிகள் சௌந்தர்ராஜன், வெங்கடேஷ், சம்பங்கி ராமய்யா மற்றும் மகேஷ் ஆகியோரை கைது செய்து விசாரிக்க அதில் எதிரிகள் சௌந்தர் ராஜ், சம்பங்கி ராமய்யா ஆகியோர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சங்கரப்பா செல்வம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார்.

**முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35-2015

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. பசவராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.முத்தைய்யா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 61 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 15.05.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் சொல்லி உள்ளவாறு தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தைப்பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். என்னுடைய மாமனார் போன் மூலமாக தகவல் சொன்னதின் பேரில் எனக்கு வழக்கு சம்பவத்தை பற்றி

தெரியும். புகார் மனுவை காவல் நிலையத்தில் போலிசார் எழுதினார்கள். புகார் மனுவுடன் திருடப்பட்டதாக சொல்லப்படும் செயினுக்கான ரசீதை கொடுத்தோமா என்றால் இல்லை. புகாரில் திருடப்பட்டதாக சொல்லப்படும் செயின் எந்த டிசைன் என சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் பாதி செயின் பரித்து சென்றுவிட்டார்கள் என்றாலும் மீதி பாதி செயின் என்னுடைய மனைவின் கழுத்திலேயே இருந்துவிட்டது என்றால் சரியல்ல. முழு செயினையும் பரித்து சென்றுவிட்டார்கள். அந்த செயின் தாலி செயினா என்றால் ஆமாம். செயினை பரிக்கும் போது என் மனைவிக்கு காயம் ஏற்பட்டதா என்றால் கழுத்தில் லேசான காயம் ஏற்பட்டது. அதற்காக மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் இல்லை. புகார் கொடுத்த பிறகு போலிசார் ஒரு முறை விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிஸ் அதிகாரி பதவி மற்றும் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. நாங்கள் புகார் கொடுத்து எத்தனை ஆண்டுகள் கிடைத்து செயின் கிடைத்தாக சொன்னார்கள் என்றால் 2 ஆண்டுகள் கழித்து செயின் கிடைத்தாக போலிசார் சொன்னார்கள். போலிசார் எங்களுக்கு கண்டுபிடித்து கொடுத்த செயின் என் மனைவி கழுத்தில் இருந்து பரிக்கப்பட்ட செயினா அல்லது வேறு செயினா என்றால் அது வேறு புதிய செயின். என் மனைவியின் கழுத்தில் இருந்து பரிக்கப்பட்டதாக சொல்லப்படும் செயினை போலிசார் கண்டுபிடித்து கொடுக்கவில்லை. என் மனைவி கழுத்தில் இருந்து செயினை யாரால் பரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35-2015

அ.சா. 5

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சதீஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சிவக்குமார் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 42 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 15.05.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் சொல்லி உள்ளவாறு தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தைப்பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அ.சா.3 எனது அக்காவின் கணவர். சம்பவம் நடைப்பெற்று 20 நிமிடத்தில் நான் சம்பவ இடத்திற்கு

சென்றேன். நான் சென்ற போது சுமார் 10 நபர்கள் அங்கு இருந்தார்கள் அதில் சுரேஷ் என்பவரும் இருந்தார் மற்றவர்கள் பெயர் எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நான் BPO தனியார் நிறுவனத்தில் வேலை செய்தேன். என்னுடைய பணி நேரம் இரவு 7.30 முதல் அதிகாலை 5 மணி வரை. நான் சென்று விசாரித்தில் எத்தனை நபர் செயினை பரித்தாக சொன்னார்கள் என்றால் 2 நபர்கள் ஹெல்மட் அணிந்துக்கொண்டு வந்து செயினை பரித்தாக சொன்னார்கள். புகார் கொடுத்த போது நானும் காவல் நிலையத்திற்கு சென்றேன். புகார் யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் உள்ள Writter எழுதினார். புகாரில் செயினின் டிசைன் சொல்லவில்லை. செயினின் ரசீதும் கொடுக்கவில்லை. பறிக்கப்பட்ட செயின் தாலி செயின் என என்னிடம் சொன்னார்களா என்றால் ஆமாம். செயினை பறிக்கப்பட்ட போது எனது அக்காவிற்கு காயம் ஏற்பட்டதா என்றால் ஆமாம். அது சம்பந்தமாக மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரனை செய்தார். என்னை 3 முறை காவல் ஆய்வாளர் விசாரித்தார். காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். புகார்தாரர் எனது அக்கா என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35-2015

அ.சா. 7

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. முரளி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.நாகராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 34 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 15.05.2026. (எதிரி ஆஜர்)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை :**

நான் கடந்த 05.07.2016ம் தேதியில் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். பார்வை மகஜர் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**